"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

ஆமோஸ் 4:12.

தேவ எக்காளம்

கிறிஸ்தவ உலகம் போற்றும் மாபெரும் தேவ பக்தனான சாது சுந்தர்சிங்கை நேர் முகமாகக் காணும் பாக்கியம் பெற்றவர்களில் நானும் ஒருவனாவேன். அந்த மேலான பாக்கியத்தைப் பாவியாகிய எனக்குத்தரத் திருவுளம் கொண்ட என் அருமை நேசரைச் சிரங் குனிந்து ஸ்தோத்திரிக்கின்றேன்.

அநேக ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த சம்பவம் அது. அப் பொழுது நான் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மெய்ஞானபுரம்

Vol. 13] ஜூன் 1981 [No. 6

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

என்ற கிராமத்திலிருந்த மிஷன் போர்டிங் பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்தேன். மிகச் சிறுவனாக நானிருந்த நாட்கள் அவை.

சாது சுந்தர்சிங் மெய்ஞானபுரத்திற்கு வருகிறார் என்ற மன மகிழ்வின் செய்தி அன்றையதினம் மாணவர்களாகிய எங்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதைக் கேட்ட மாணவர்களாகிய எங்கள் அனைவரின் உள்ளங்களும் ஆனந்தப் பரவசமுற்றது.

அந்த நாட்களில் இக்காலத்தைப்போல பஸ் வசதிகள் எதுவும் கிடையாது. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மக்கள் மாட்டு வண்டிகளிலேயே பிரயாணம் செய்தார்கள். மெய்ஞானபுரத்திற்கு வடதிசையிலிருக்கும் செம்மண் தேரிக்காட்டு வழியாக அன்றைய நன்னாளில் இரண்டு வில்வண்டிகள் எங்கள் பள்ளிக்கு வந்துசேர்ந்தன.

இதோ, சாது சுந்தர்சிங் வந்துவிட்டார் என்ற செய்தி காட்டுத் தீபோல் மாணவர்கள் மத்தியில் பரவிற்று. அவ்வளவுதான், எங்கள் மாணவர் குப்பல் ஓடோடிச் சென்று வண்டிகள் இரண்டையும் முற்றுகையிட்டது. முதல் வண்டி வந்துநின்றது. அதிலிருந்து நேர்த்தியான வஸ்திரம் தரித்த ஒருவர் இறங்கினார். ஒருவேளை அவர்தான் சுந்தரோ என்று நாங்கள் நினைத்தோம். ஆனால் அவர் சுந்தர் அல்லவென்றும் அவரின் துபாசி (மொழிபெயர்ப்பாளன்) என்றும் எங்களுக்குக் கூறினார்கள். அடுத்து ஒரு வண்டி வந்தது அதில் சுந்தர் காவி வஸ்திரம் தரித்தோனாய், காலில் செருப்புமின்றி, தனது கைகளை ஒன்றின்மேல் ஒன்றாய் வைத்துக் கருணை பொழியும் காருண்யனாக, பிரகாசமான முகத்தினனாக அமர்ந்திருந்ததைக் கண்டு பிரமிப்படைந்தேன். கிறிஸ்து இரட்சகரே வண்டியில் அமர்ந்திருக்கின்றார் என்ற பயபக்திக்குரிய பரிசுத்த சிந்தை எனக்குண்டாயிற்று. கிறிஸ்து பெருமானின் மிகுந்த மனத்தாழ்மையும், தேவ அன்பும், பரிசுத்தமும் அவரில் குடிகொண்டிருந்ததை நான் கண்டு வியப்புற்றேன்.

பின்னர் அவர் பள்ளியின் ஒவ்வொரு வகுப்புக்கும் வந்து மாணவர்களுக்கு வந்தனம் செலுத்தக் கடந்து சென்றார். கூப்பிய கரங்களுடன் எனது வகுப்பறையைச் சுந்தர் கடந்து சென்றபோது சிறுவனான நான் எழுந்து அவரை உற்றுநோக்கினேன் அவரும் என்னைமட்டும் பார்ப்பதுபோலிருந்தது. அந்த அதி அற்புத ஒளி நிறைந்த தேவப் பார்வை மின்னல் ஒளிப் பிரகாசம்போல என் உள்ளத்தினுள் ஊடுருவிச் சென்றது. என் உள்ளம் தேவப் பிரசன்னத்தால் கொழுந்துவிட்டு எரிந்தது. அந்த நாளிலேயே தேவன் என்னைத் தமது சொந்தப் பிள்ளையாகத் தெரிந்துகொண்டுவிட்டார். நான் எனது பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பின் சந்

(23-ம் பக்கம் பார்க்க)

கர்த்தருக்குள் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் பெருக உண்டாவதாக. ஆமென்.

பட்டணத்தின் மக்களுக்குப் பால் விநியோகம் செய்யும் பால் வியாபாரி ஒருவன் தன்னுடைய பாலில் பெருமளவு தண்ணீர் கலப்பதை ஒருசமயம் நான் கவனித்துக் கொண்டிருந்தேன். தன்னை ஒருவரும் பார்க்கவில்லை என்று அவன் ஒருவேளை எண்ணியிருந்திருப்பான், ஆனால், நான் அதைத் தனித்துக் கவனிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருந்தது. பாலில் தண்ணீர் கலக்கப்பட்டிருந்தாலும், பட்டணத்து மக்கள் அதைக் கண்டு கொள்ளாதிருக்கும்படியாக எத்தனை புத்திசாலித்தனமாக அந்தக் காரியத்தை அவன் செயல்படுத்துகின்றான் என்பதை நான் கண்டு மிகவும் அசந்து போனேன். பாலை மக்கள் வாங்கியதும், பாலானது சுத்தமானதா? அல்லது தண்ணீர் கலப்படமானதா? என்பதை சோதித்து அறிந்து கொள்ள மக்கள் என்ன பரிசோதனை செய்வார்களோ அந்தப் பரிசோதனையையே அந்தப் பால் வியாபாரியும் மிகுந்த தந்திரத்தோடு செய்துகொண்டே அதே நேரத்தில் தண்ணீரையும் கலந்து கொண்டிருந்த அவனது செயல் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. தண்ணீரைக் கலப்பதிலும்கூட அவன் எத்தனை விவேகத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதாயிருக்கின்றது! பாலில் வெறும் தண்ணீரை மட்டும்தான் கலப்பார்கள் என்று நாம் நினைக்கின்றோம். அப்படியல்ல, அவன் பாலையும் அப்போதைக்கப்போது கொஞ்சம், கொஞ்சம் கலந்து தண்ணீரின் பரிமாணத்தை நன்கு மறைத்துவிடுகின்றான்.

அன்றொரு நாள் பஸ் மார்க்கமாக நான் ஒரு கிராமத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தேன். கிராமத்தின் ஆரம்பத்திலுள்ள ஊர்க் கிணற்றண்டை கொஞ்சம் ஆடுகள் நின்று கொண்டிருந்தன. இருவர் ஒரு ஆட்டைப் பிடித்து வலுக்கட்டாயமாக அதின் வாயைத் திறந்து தண்ணீரை ஊற்றிக்கொண்டிருந்தனர். அளவுக்கு மீறி தண்ணீர் ஊற்றப்பட்டதைக் கண்டு நான் மிகவும் துக்கமடைந்தேன். ஆடுகள் தாகமாயிருந்தால் தாமாகவே தண்ணீர் குடிக்குமே, இதற்கு மாறாக இப்படி அவற்றைப் பிடித்துவைத்து நிர்ப்பந்தப்படுத்தி ஏன் இவ்வளவு தண்ணீரை அதின் வாய்க்குள் ஊற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதைக் குறித்து நான் வியப்புற்று என் அருகில் இருந்த ஒருவரை வினவினேன். அவர் இவ்வாறு சொன்னார் "இன்று இந்தக் கிராமத்தில் சந்தை நாள். இந்த ஆடுகள் அந்தச் சந்தைக்கு விற்பதற்காகக் கொண்டு செல்லப்படுகின்றன. ஆடுகளை வாங்குவோர் ஆட்டைத் தூக்கிப்பார்த்து அதின் எடைக்குத்தக்கதாக விலை மதிப்பீடு செய்வதன் காரணமாக இப்படித் தண்ணீர் ஊற்றி வயிற்றை நிரப்பி வாங்குவோரை வஞ்சிப்பதற்காக இந்த அக்கிரமம் செய்கின்றார்கள்" என்றார்.

இப்படி உணவுப் பண்டங்களில் கலப்படமும், வியாபாரத் துறைகளில் ஏமாற்றுதல்களும், மோசடிகளுக்கும், வஞ்சகங்களும் நடைபெறுவதைப்போலத் தேவனது களங்கமற்றச் சுத்த சுவிசேஷத்திலும்கூட எத்தனையோ கள்ள உபதேசங்களையும், சத்தியத்திற்குப் புறம்பான மாறுபாடான போதனைகளையும் வேதப் புரட்டர்கள் வாழைப்பழத்தினுள் கூர் ஊசியைச் சொருகுவதுபோல இந்த இறுதி நாட்களில் வெகு தந்திரமாகப் புகுத்திப் பேதை மக்களை வஞ்சித்து வருகின்றார்கள். நித்திய ஆக்கினை (Eternal Damnation) பாவிகளுக்கு ஒருக்காலும் கிடையவே கிடையாது என்று ஒரு சமயம் ஒரு வேதப்புரட்டன் என்னோடு கடுமையாகத் தர்க்கித்தான். பரிசுத்த ஆவியானவர் தாமே அவன் தனது வாயைத் திரும்பவும் திறவாதிருக்கத்தக்கதான விதத்தில் தம்முடைய வசனங்களை எனக்குத் தந்து அவன் வாயை அடைத்தார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

அன்றொரு நாள், கன்வென்ஷன் பிரசங்கியார் ஒருவர் இரண்டு நாட்கள் ஆத்துமத்திற்குப் பயன் அளிக்கக்கூடிய நல்ல தேவச் செய்திகளை வழங்கினார். மூன்றாவது நாள், பரிசுத்தாவியின் அபிஷேகம் நமக்குக் கிடைக்கும்படியாக நாம் காத்திருந்து ஒருக்காலும் ஜெபிக்க வேண்டிய அவசியம் கிடையாது என்றும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளும்போதே பரிசுத்தாவியின் அபிஷேகத்தையும் நாம் பெற்றுக்கொள்ளுகின்றோம் என்றும், அந்நிய பாஷைகளைப் பேசுவதைக் குறித்து ஏளனமாகவும் ஒரு கூட்டத்தில் கூறினார். என் உள்ளம் மிகவும் தாங்கலடைந்தது. அந்த மனிதனோடு தர்க்கிக்கும்படியாகத் துடி துடித்தேன். "நாய் வாலை நிமிர்த்த மட்டைவைத்துக் கட்டினாலும் பயனளிக்கப்போவதில்லை" என்ற ஆவியானவரின் ஆலோசனைக்கு இணங்கி அந்த நபருடன் தர்க்கம் செய்யவில்லை.

அருமை நேசர் தம்முடைய அப்போஸ்தலர்களிடம் பரிசுத்த ஆவியின் அக்கினி அபிஷேகத்திற்காக எருசலேமில் காத்திருக்கச் சொன்னார். "ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்". (அப். 1:5) எருசலேமிலுள்ள மேல் வீட்டறையொன்றில் ஒருமனப்பட்டு ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்த அப்போஸ்தலர் உட்பட நூற்றிருபது பேர் பரிசுத்தாவியின் அக்கினி அபிஷேகம் பெற்றார்கள். அதைத் தொடர்ந்து அந்நிய பாஷைகளைப் பேசும் வரம் பெற்றார்கள். அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தார்கள். பின்வந்த நாட்களில் கர்த்தருக்கென்று பலத்த காரியங்களைச் செய்தார்கள். கோழைகளாக நடுங்கிக் கொண்டிருந்த சீஷர்கள் உன்னதத்தின் பெலனால் தரிப்பிக்கப்பட்ட பொழுது உலகமெங்கும் மிஷனரிகளாகப் புறப்பட்டுச் சென்றார்கள். சபைகள் எழும்பின.

தேவநாமம் அவர்களின் மூலமாக பூமியின் கடையாந்திரங்கள் பரியந்தம் மகிமைப்பட்டது.

பரிசுத்தாவியின் அபிஷேகத்தை மறுதலிக்கின்ற, அந்தப் பரம சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிற, அப்படிப்பட்ட ஒரு உன்னதமான தனிப்பட்ட அனுபவம் உண்டு என்று ஒத்துக்கொள்ளாத எத்தனையோ கிறிஸ்தவ மக்கள் இந்தக் கடைசி நாட்களில் உண்டு. இதில் பெரிய, பெரிய ஆவிக்குரிய தலைவர்களும், ஊழியர்களும் கூட இருக்கின்றனர் என்பது எத்தனை கிலேசத்திற்குரிய காரியம்! பரிசுத்தாவியின் அபிஷேகத்திற்காகக் காத்திருந்தால் பிசாசு அசுத்த ஆவிகளை உன்னில் புகுத்திவிடுவான், ஆகவே, அதற்காக ஒரு போதும் காத்திராதே என்று துர் உபதேசம் செய்யும் ஒரு நூதன வகுப்பினரும்கூட உண்டு. எத்தனை துக்ககரமான காரியம்! "உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால் அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா?

அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா?

பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" (லூக். 11:11-13) என்று எத்தனை அருமையாக ஆண்டவர் கூறியுள்ளார்.

பாவியாகிய நானும்கூட அநேக ஆண்டுகாலம் இந்த உன்னத பெலத்தால் இடை கட்டப்படாதவனாகத் தவறுதலான உபதேசங்களில் சிக்குண்டிருந்தேன். ஆனால், அன்பின் கர்த்தர் ஏற்றகாலத்தில் என் இதயக் கண்களைத் திறந்தார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம். தேவன் பயன்படுத்தினதான மாபெரும் தேவபக்தன் டி. எல். மூடி என்பவரது ஜீவிய சரித்திரம் காலப்போக்கில் என்னில் ஒரு பலத்த மாற்றத்தை உண்டாக்கியது. பரிசுத்தாவியானவரின் அபிஷேகம் எனக்கு எத்தனை அத்தியந்த தேவை என்பதனை நான் அப்புத்தகத்தின் மூலம் என்னளவில் பலமாக உணரத்தொடங்கி "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல" நானும் பரிசுத்தாவியின் அருள்மாரிக்காகக் கதறித்துடித்துக் கொண்டிருந்தேன். அன்பின் கன்மலை எனக்கு இரங்காதவர்போல, தமது அன்பான முகத்தை மறைப்பவராக நெடுங்காலம் எனக்குக் காணப்பட்டார். நான் மிகவும் சோர்ந்து போனேன். ஆனாலும், என் முகத்தைக் கற்பாறையைப் போலாக்கி என் தேவனின் இரட்சிப்புக்கு நம்பிக்கையுடன் காத்திருந்தேன். "அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்" (ஏசா. 30:18) என்றும் "நான் கர்த்தர் எனக்குக் காத்திருக்கிறவர்கள்

வெட்கப்படுவதில்லை " (ஏசா. 49:23) என்றும் " தேவனே உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்ற முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை அவைகளைக் கண்டதுமில்லை " (64:4) என்றும் " தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர் " (புலம்பல் 3:25) என்றும் " என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை " (யோவேல் 2:26) என்றும் திருவுளம் பற்றிய என் அன்பின் நேச கர்த்தர் ஏற்ற காலத்தில் எனக்கு இரங்கினர். எனது இதயக்கதறலை எனக்கு அருளிச்செய்தார். என் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகளை ஓடும்படிச் செய்தார் (யோவா. 7:38) அவருக்கு நான் என்ன ஈட்டைச் செலுத்துவேன்?

ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட நாளின் அதிகாலை வழக்கம்போல் ஜெபத்திற்காகக் கண்விழித்தேன். மணி சரியாக 3.15 ஆகியிருந்தது. இந்த அதிகாலை வேளை நான் என் தகப்பனிடம் எனது தேவைகளையும், உதவி ஒத்தாசைகளையும் ஏன் தெரிவிக்க வேண்டும்? எனது உள்ளத்தின் நினைவுகளையும், நினைவுகளின் தோற்றத்தையும் அறிகிற (1 நாளா. 28:9) என் கர்த்தாவிடத்தில் நான் கேட்பதற்கு என்ன இருக்கிறது? இந்த விடிபகல் நேரத்தில் பரலோகத்தில் திரளான பரிசுத்தர் குழாமும், தேவதூதர்களும், கேருபின்களும், சேராபீன்களும், மூப்பர்களும், ஜீவன்களும் " சேனைகளின் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் " என்று ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கையில் நானும் அவர்களோடு சேர்ந்து பூமியிலிருந்து என் கன்மலையை ஸ்தோத்திரிப்பேன் என்று எண்ணிக்கொண்டு வாய் திறந்து ஒருமணி நேரம் துதித்துக்கொண்டேயிருந்தேன். முழங்காலில் ஒருமணி நேரத்திற்கும் அதிகமாக நின்றபடியால் கால்களில் சற்று வேதனையாயிருந்தபடியால் கால்களைப் பூமியில் ஊன்றி எழுந்து நின்று தொடர்ந்து ஸ்தோத்திரித்துக் கொண்டேயிருந்தேன். சில நிமிட நேரங்கள்தான் கடந்து சென்றிருக்கும். என் தலைக்கு மேலாக மிகவும் பிரகாசமான ஒளி நிழலிட்டுக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன். என் கண்கள் மூடப்பட்டிருந்தன. பல ஆயிரக்கணக்கான வாட்ஸ் சக்தி வாய்ந்த மின் ஒளி விளக்கு ஒன்று என் தலைக்கு மேல் எரிந்து கொண்டிருக்கும் உணர்வை நான் அடைந்தேன். சில வினாடிகளுக்குள்ளாக அந்த அற்புத ஒளி அப்படியே நகர்ந்து, நகர்ந்து என் தலை மேல் வந்தமர்ந்தது. அவ்வளவுதான், மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கும் மின் கம்பியைத் தொட்டுவிட்டால் உண்டாகக் கூடிய மாபெரும் அதிர்ச்சி என் சரீரத்தைத் தாக்கிற்று. இது மின் அதிர்ச்சியல்ல, பரலோக நித்திய ஆனந்தமகிமையின் மாபெரும் சந்தோஷ அதிர்ச்சியாகவிருந்தது. என்ன நடந்ததென்று நினைக்கின்றீர்கள்! உடனே என் நாவின் கட்டுகள் அவிழ்க்கப்பட்டு என் பரிசுத்தரை மகாசப்த

மாக நான் ஆர்ப்பரித்துத் துதித்தேன். எனது வாழ்வில் அத்தனை சப்தமாக நான் குரல் எழுப்பியதே இல்லை. என் கால்கள் பூமியில் நிற்க மறுத்துவிட்டன். சிறகடித்து எழும்பும் பறவைபோல என் கால்கள் ஆகாயத்தில் பறப்பதைப்போலக் காணப்பட்டன. அந்தச் சமயம் நான் என் உள்ளத்தில் அடைந்த ஆனந்த பரவசத்தின் பாக்கிய நிலையை வெறும் மனுஷீக வார்த்தைகளால் இங்கு நான் அத்தனை எளிதாகக் குறிப்பிட்டுவிட முடியாது. இவ்விதமாக அலை யலையாக இரண்டு தடவைகள் தேவப் பிரசன்னத்தின் ஒளி என்னில் கடந்து சென்றது. ஒருவேளை அந்த ஆவியின் அருள்மாரி நீண்ட நேரம் என்னில் ஊற்றப்பட்டுக் கொண்டிருந்திருக்குமானால் சந்தோஷம் தாங்காமல் நான் மடிந்து போயிருந்திருப்பேன். ஆ, எத்தனை பரலோக சந்தோஷமது! இந்தப் பரிசுத்தாவியின் ஊற்றுதலுக்குப் பின்னர் என்னிலே ஒரு மாபெரும் ஆவிக்குரிய வலிமையை நான் காண்கின்றேன். பாவங்களை எளிதாக மேற்கொள்ளும் தேவ கிருபை என்னைச் சூழ்ந்திருப்பதைக் காண்கின்றேன். அழியும் ஆத்துமாக்களைப்பற்றிய முன்பில்லாத அன்பின் பாரத்தையும் என் உள்ளம் பெற்றுக் கொண்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது கல்வாரி அன்பு என் உள்ளத்திற்குள் என்றுமில்லாத விதத்தில் பாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டு பரவசமடைகின்றேன். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப். 1:8)

"But you shall receive power - ability, efficiency and might - when the Holy Spirit has come upon you; and you shall be My witnesses in Jerusalem and all Judea and Samaria and to the ends - the very bounds - of the earth" (ANT)
என்று அருமை இரட்சகர் சொன்னார் அன்றோ?

இதை வாசிக்கின்ற அன்பார்ந்த தேவப்பிள்ளையே, நீ இந்த உன்னத பெலனால் தரிப்பிக்கப்பட்டுள்ளாயா? பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டிருக்கின்றாயா? இல்லையேல் அதற்காக ஆண்டவரிடம் மன்றாடி மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போலக் கதறிப் பெற்றுக் கொள்ளும்படியாக உன்னை அன்புடன் கேட்கின்றேன். "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்" (யோவா. 16:24) என்று ஆண்டவர் கூறியிருக்கின்றார். "......ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன். வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" (யோவா. 7:37,38) என்றும் "நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமார

ரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்" (யோவேல் 2:28) என்றும் "தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்" (ஏசாயா 44:3) என்றும் வாக்குப்பண்ணியுள்ளார்.

பரிசுத்த ஆவியினால் நான் அபிஷேகம் பண்ணப்பட எனக்கு மிகுந்த அனுகூலமாயிருந்த டி. எல். மூடி என்ற தேவ பக்தனுடைய ஜீவிய சரிதையின் ஆசீர்வதிக்கப்பட்ட அந்தப் பகுதியைக் கீழே தருகின்றேன். கர்த்தர் தாமே உங்களோடு பேசுவாராக. ஆமென்.

(மூடியிடம் காணப்பட்ட, வல்லமையின் இரகசியம், அவர் பரிசுத்த ஆவியைப் பூரணமாய்ப் பெற்றதுமன்றி, பரலோகத்திலிருந்து மனிதருக்குக் கிடைக்கக் கூடிய வல்லமையையும் பெற்றிருந்தார். அவர் பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றதாக உணர்ந்தார். அவருக்கு அதைப்பற்றிச் சந்தேகமே இல்லை. தம் காலத்துத் தேவ ஊழியரைப் பார்த்து, "நீர் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீரா?" என்று கேட்டால், அநேகருக்கு அத்தகைய ஞானஸ்நானம் ஒன்று இருக்கிறதா என்பது கூடத் தெரியாது. மூடி அந்த அனுபவத்திற்கு வருமுன், ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணும்படி வெகு பிரயாசப்பட்டுப் பார்த்தும், பரத்திலிருந்து அருளப்படும் வல்லமை அவருக்கு இல்லாதிருந்தபடியால், சரீரப் பிரயாசம் இருந்ததேயன்றி, அந்த ஊழியத்தில் தேவ வல்லமை விளங்கவில்லை. அப்படித்தான் தற்காலத்திலும் அநேக ஊழியர்கள் தங்களுடைய சுய பிரயாசத்தினால் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணிவிடலாமென்று எண்ணுகிறார்கள். ஆத்தும ஆதாயம் பண்ணுகிறவர்கள் முதலாவது பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெறவேண்டும். தேவ வல்லமை அருளப்பட்டாலன்றி அவர்களுடைய பிரயாசம் வீணாகவே முடியும்.

சிலர் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்றவர்களிடம் வரங்களும், அடையாளங்களும் காணப்படும் என்று எண்ணுகின்றார்கள். மூடியிடம் காணப்பட்ட அடையாளம் அவர்களிடம் காணப்படாவிட்டால் அவர்கள் அந்த அனுபவத்தைப் பெறவில்லையென்றே சொல்லவேண்டும். மூடி ஆண்டவரை அறியாத ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதில் தன் முழு நேரத்தையும் செலவிட்டார். இதுவே பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றவர்களிடம் காணப்படும் அடையாளமாகும். ஏதோ ஒரு நாளில் ஒரு பாஷையைப் பேசி விட்டு, தாங்கள் பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டோம் என்று எண்ணுகிறவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களாயிருக்கிறார்கள். பாஷை முக்கியமல்ல, ஜீவியத்

தின் மாறுதல் தான் முக்கியம். ஜீவியத்தைக் கொஞ்சமும் மாற்று மல் பாஷையை மட்டும் பேசுகிற அநேகரால் கிறிஸ்து மார்க்கத் துக்கு பலவிதமான நிந்தைகள் உண்டாயிருக்கிறதேயன்றி, ஆண் டவருடைய நாமம் மகிமைப்பட்டது இல்லை.

மேலும் வரங்களும், அடையாளங்களும் பரத்திலிருந்து அரு ளப்படும் ஈவுகளே. வரங்களையும், அடையாளங்களையும் தேடுகிற வர்களுக்குச் சில வேளைகளில் சாத்தான் தன்னுடைய வரங்களை யும், அடையாளங்களையும் கொடுத்து விடுகிருன். அவர்கள் சாத்தா ஞல் வஞ்சிக்கப்பட்டு மற்றவர்களிடம் போய் "ஆண்டவர் இன்ன படி சொல்லுகிருர்" என்று சொல்லி மற்றவர்களை வஞ்சிக்கிருர் கள். மற்றவர்களைத் தூஷிக்க வேண்டும் என்கிற நோக்கமாய் இதை எழுதாமல் அனுபவ சாட்சியிலிருந்து இதை எழுதுகிறோம். வரங் களையும், அடையாளங்களையும் தேடுவதை விட, ஆண்டவரைத் தேடுவது தான் முக்கியம். அவரை நாம் தேடும்போது அவர் நமக்கு என்ன ஈவுகளைக் கொடுக்கச் சித்தம் கொண்டிருக்கிருரோ அவை களைக் கட்டாயம் அவர் கொடுப்பார். ஆகையால் ஆண்டவர் பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளும்படி திட்டமாய் ஜெபிக்கவேண்டும். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெருதவர்கள் ஆண்டவரு டைய ஊழியத்தைச் செய்யத் தகுதியுள்ளவர்கள் அல்ல. அவர்கள் செய்யும்ஊழியம் மாம்சத்தில் செய்யப்படும் வீண்பிரயாசமாகமுடியும்

மூடி பக்தன் ஆரம்ப காலத்தில் இந்த அனுபவத்திற்கு வராதி ருந்தார். அவர் பிரசங்கம் பண்ணுகையில் இரு சகோதரிகள், அவர் பரிசுத்தாவியின் வல்லமையைப் பெறும்படி ஜெபித்து வந்தார் கள். ஒருநாள் கூட்டம் முடிந்ததும், அந்த இரண்டு சகோதரிகளும் மூடி பிரசங்கியாரோடு பேசிக்கொண்டிருக்கையில் அவரைப் பார்த்து "நாங்கள் இருவரும் உமக்காக ஜெபித்து வருகிறோம்" என்ருர்கள். அப்பொழுது மூடி ஆச்சரியப்பட்டு, "எனக்காக ஏன் ஜெபிக்கிறீர் கள்? இரட்சிக்கப்படாத உலகத்திற்காக அல்லவா ஜெபிக்கவேண் டும்" என்ருர். அப்பொழுது அந்த சகோதரிகள் "நீர் பரலோகத் தின் வல்லமையைப் பெறும்படி ஜெபிக்கிறோம்" என்ருர்கள். மூடிக்கு அது சிறிதும் விளங்கவில்லை. ஆகையால் அதைத் தெளிவு படுத்தும்படி அச்சகோதரிகளைக் கேட்க, பரிசுத்த ஆவியின் ஞான ஸ்நானத்தைப்பற்றித் திட்டமாய் அவர்கள் அவருக்குப் போதித்தார் கள். அதைக் கேட்டதும், நாம் இங்கேயே அதற்காக ஜெபிக்கலா மென்று மூன்றுபேரும் முழங்காலிட்டு ஜெபித்தார்கள். அந்தச் சகோதரிகளின் ஊக்கமான ஜெபங்கள் அவருடைய உள்ளத்தைப் பிளந்தது. அவரும் அதிக வாஞ்சையோடே ஜெபித்தார். அந்த நாள் முதல் அவர் பரிசுத்தாவியால் நிரப்பப்படும்படி விடாது ஜெபித்து வந்தார்.

ஒரு நாள் அவர் நியூயார்க் நகரத்து வீதியில் நடந்து கொண் டிருக்கும்போது தன்னையுமறியாமல் ஒரு வல்லமை அவருக்குள்

புகுந்தது. அவருடைய ஜெபம் கேட்கப்பட்டது. பக்கத்திலிருந்த ஒரு சிநேகிதனுடைய வீட்டுக் கதவைத் தட்டி உள்ளே சென்று, தனி அறையொன்று தனக்குச் சிறிது நேரத்திற்குத் தரும்படி கேட்டார். அங்கே ஆண்டவரோடு தனித்திருந்தார். ஆண்டவருடைய வல்லமை அவருக்குள் புகுந்தது. சொல்லமுடியாத ஆனந்தத்தையும், சந்தோஷத்தையும் அவர் பெற்றார். அவர் பெற்ற சந்தோஷத்தை அவராலே தாங்க முடியாது போய்விட்டது. "போதும் ஆண்டவரே, நிறுத்தும்; மற்றபடி நான் சந்தோஷத்தினால் செத்துப் போவேன்" என்று கதறினார். அந்த இடத்தை விட்டு வெளியேறும் போது ஒரு புது வல்லமையைப் பெற்றவராய் வெளியேறினார். அன்றுமுதல், தான் பெற்ற அனுபவத்தை மற்ற ஊழியக்காரரும் பெறும்படி அவர்களுக்குப் போதித்துவந்ததுமல்லாமல், தன்னுடைய உடன் ஊழியக்காரனாகிய பண்டிதர் டாரி (TORREY) என்பவரையும் அடிக்கடி பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப்பற்றி அவர்களுக்குப் பேசும்படி ஏவினார்.

மூடியுடைய வேதசாஸ்திர கலாசாலை மாணாக்கர்கள் இந்தப் புதிய அனுபவத்தைப் பெறாதிருப்பதைக் கண்டு அவர்களுக்காக ஒரு விசேஷித்த எழுப்புதல் கூட்டத்தை அவரும் டாக்டர் டாரியும் சேர்ந்து 1894-ம் வருடம் ஜூலை மாதம் 8-ம் தேதியன்று நடத்தினார்கள். அன்றையதினம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்றால் என்ன? எதற்காக அதைப் பெறவேண்டும்? அதைப் பெறுவது எப்படி? என்று மாணாக்கர்களுக்குத் திட்டமாய்ப் போதித்தார். அதன்பின் 12 மணிக்கு எல்லாரும் தனித்தனியே அறைகளிலோ, கூடாரங்களிலோ, காடுகளிலோ ஆண்டவரோடு தனித்திருந்து ஜெபிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். கூடியிருந்த மாணாக்கர்களின் தொகை 456. திரும்ப அவர்களெல்லாரும் மூன்று மணிக்கு ஒன்றாய்க் கூடினபோது மூடி பக்தன் அனுபவ சாட்சியிருந்தால் தெரிவிக்கும்படிக் கேட்க 75 மாணாக்கர்கள் ஒருவர் பின் ஒருவராய் எழுந்து நின்று தாங்கள் பெற்ற பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப்பற்றி அனுபவ சாட்சி கொடுத்தார்கள். அவைகளைக் கேட்ட மூடி "வாலிப மாணாக்கரே, நாம் இங்கேயே முழங்காற்படியிட்டு, பெந்தேகோஸ்தே நாளிலே எவ்விதமாய்ப் பரிசுத்தாவி அருளப்பட்டதோ அவ்விதமாய் நமக்கும் அருளப்படும்படி ஜெபிக்கக்கடவோம்" என்றார். அவர்கள் ஜெபித்து முடியுமுன் மேகங்கள் கறுத்து மழை பொழிய ஆரம்பித்தது. அன்று ஆரம்பமான ஆவியின் அருள்மழை, பத்து நாட்களாய் அங்கே கூடியிருந்த மாணாக்கர்களைக் கிருபையாலும், இரக்கத்தாலும், தேவ வல்லமையாலும் நிரப்பிற்று. இக்காலத்தில் கிறிஸ்து மார்க்கம் இந்தியாவில் பரவ வேண்டுமானால், பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெற்ற ஊழியர்கள் தேவை. அப்படிப்பட்ட ஊழியர்களை ஆண்டவர் எழுப்பும்படி இடைவிடாமல் ஜெபித்து வருவோமாக.)

—

தேவ சமூகத்தின் பிரசன்ன ஒளியில் ஜீவியம் செய்!

தேவ சமூகத்தை ஒரு மனிதன் தன் தினசரி கிறிஸ்தவ ஜீவியத்தில் நிமிஷந்தோறும் உணர்ந்து அதின் பரிசுத்த வெளிச்சத்தில் செல்லுவது நடைமுறைக்கு அப்பாற்பட்ட ஒன்று என்றும், அது உண்மையற்ற தப்பரையான தார்ப்பரியம் என்றும் எண்ணுவது முற்றும் தவருகும். இந்நாட்களில் அநேக தேவமக்கள் தேவனுடைய பிரசன்னத்தை எவ்வித இடைவெளியுமின்றித் தொடர்ச்சியாக அனுபவித்துக் கர்த்தரில் மகிழ்ந்து வருகின்றனர். தேவனின் பிரசன்னத்தை நீ உனது சொந்த வாழ்க்கையில் விநாடித்தோறும் அனுபவிக்க விரும்புகின்ருயா? அப்படியானுல், நீ கைக்கொள்ள வேண்டிய காரியங்கள் கீழே தரப்படுகின்றன:-

1) தேவனுடைய வார்த்தைகளை மிகவும் கவனத்துடன் அடிக்கடி வாசித்து அவற்றைக் குறித்துத் தியானம் செய். கர்த்தரின் வார்த்தைகளிலிருந்து எழும்பும் தேவ சப்தத்திற்கு நீ உன் செவியைச் சாய்த்துக்கொள். தேவன் தம்மைக் குறித்த அன்பின் இருதயத்தைக் கொண்டிருக்கும் மக்களுடன் நிச்சயமாகவே பேசுவார்.

2) ஆண்டவரோடு அடிக்கடிப் பேசிக்கொண்டேயிரு. வழக்கமாக முழங்காலூன்றி ஜெபிக்கும் ஜெப வேளைக்காகக் காத்துக்கொண்டிராமல் எந்நிமிஷமும் உன் உள்ளம் கர்த்தாவோடு சம்பாஷித்துக் கொண்டேயிருக்கட்டும். நீ தேவனேடு சஞ்சரித்துக் கொண்டிருப்பாயானுல் அவர் உன் அருகிலேயே எப்பொழுதும் இருக்கின்ருர் என்பதை நினைவில் வைத்துக்கொள். அவர் உனது மிகவும் அன்பான மகா பெரிய ஆப்த நண்பனுவார். உனது உள்ளத்தின் அந்தரங்க எண்ணங்களை அவரிடம் தெரிவி. சிக்கலான பிரச்சினைகளில் அவருடைய ஒத்தாசைக்காக மன்ருடு. தேவனுக்கு எந்த ஒரு காரியமும் அற்பமானதல்ல. அதேபோன்று அவர் கிரியை செய்ய முடியாதபடி எந்த ஒரு காரியமும் அவருக்கு அத்தனை பெரியதுமல்ல.

3) துதித்தலே உனது வாழ்வின் பழக்கமாயிருப்பதாக. ஒவ்வொரு காரியத்திற்கும் தேவனுக்கு நன்றி சொல்லும் நற்பழக்கத்தை உன்னில் உருவாக்கிக்கொள். ஆண்டவருக்கு நீ எத்தனை பெரிய நன்றி கடனுளி என்பதை இப்படிச் செய்வதன் மூலம் நீ உணர்ந்து ஆச்சரியமடைவாய்.

4) துதித்தல் மகிழ்ச்சியை உண்டுபண்ணும். கர்த்தரில் மகிழ்ச்சியாயிருப்பதே உன் பெலனுயிருக்கும். ஒரு மகிழ்ச்சியுள்ள கிறிஸ்தவனிடத்தில் உலகம், மாமிசம், பிசாசின் பிடிப்புகள் அதிகமாயிருக்கமுடியாது. உனது வாழ்க்கையில் நீ மகிழ்ச்சியாயிருக்க உலகப்

பிரகாரமான எவ்வித ஏதுக்கள் இல்லாதிருப்பினும் கர்த்தருக்குள் நீ களிகூர்ந்து கொண்டிருக்கலாம்.

5) தேவ சமூகத்தில் அமைதியாகக் காத்திருக்கும் நேரங்களை நீ உருவாக்கிக்கொள். அந்நேரங்களில் "கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று நீ அவரிடம் சொல்லு. தேவன் தமது குரலுக்கு இணக்கம் தெரிவிக்கும் தவனமுள்ள செவிகளுடன் நிச்சயமாகப் பேசுவார். நமது ஞாபக சக்திகள் தேவனின் வார்த்தைகளைப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளும் ஆச்சரியமான பண்டகசாலைகளாகும். வேத வசனங்களை மிகவும் கருத்துடன் அநேக தடவைகள் நீ வாசித்துவிடுவாயானல் அவைகளனைத்தும் இப் பண்டகசாலைகளை நிரப்பிவிடும். இதன் பின்னர், ஆவியானவர் உனது ஆவிக்குரிய தேவையின்படி இப்பண்டக சாலைகளிலிருந்து நீ சேமித்து வைத்த தமது ஜீவ வார்த்தைகளை அப்போதைக்கப் போது உனக்குத் தந்தருள்வார்.

6) தேவ சமூகத்தைத் தொடர்ச்சியாக உணர்ந்து கொள்ளும் வகையில் நீ உன் அன்றுடகக் காரியங்களை ஒழுங்கு செய்துகொள். இரவில் நீ உன் தூக்கத்திலும் "தேவனே, நீர் எனக்குச் சொல்லும்படியான காரியங்கள் ஏதேனுமிருப்பின் எனக்கு வெளிப்படுத்தும்" என்று சொல்லுவாயானல் தேவன் அவ்விதம் செய்வார். கர்த்தரோடு உறவாடி இன்புறுவதற்கு அனுகூலமாக அதிகாலையிலேயே நீ எழுந்திருத்தல் மிகவும் அவசியமாகும்.

தேவ சமூகத்தை உணர்ந்து ஜீவியம் செய்தலே ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையின் மிகவும் ஆசீர்வாதமான நிலையாகும்.

நான் தேவ சமூகத்திலிருப்பேனானல் வெற்றிகளும், பேர் பிரஸ்தாபங்களும், புகழ்ச்சிகளும் என்னைப் பாதிக்க இயலாது. சோதனைகள் என்னைக் கீழே தள்ளவும் முடியாது. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினலே யாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டாகிவிடுகின்றது.

தேவனேடு சஞ்சரிப்பது ஆசீர்வாதமான ஒரு வாழ்க்கையாகும். இதன் சிறப்பு அம்சம் யாதெனில் அது உன்னை மோட்சத்திற்கும், நித்திய மகிமைக்கும் நிச்சயமாக வழிநடத்திச் செல்லும்.

தேவ எக்காளம்

ஆன்ம ஈடேற்றத்திற்கெனப் பிரசுரமாகும் ஓர் ஆவிக்குரிய மாதாந்திர வெளியீடு. இது எந்த ஒரு சபைப் பிரிவையும் சார்ந்த ஒரு பத்திரிக்கையல்ல. ஆண்டுச் சந்தா ரூ. 5 மட்டுமே.

அனுப்பவேண்டிய முகவரி:-

DEVA EKKALAM,
Kotagiri P. O. - 643 217,
Nilgiris, S. India.

"ஜீவன் உனக்குக் கசப்பாகி சாவை நீ விரும்பும் போது!"

(மறைவான உண்மைக் கடிதம் ஒன்றினுக்கு வெளியரங்கமான பதிற்கடிதம்)

அன்புள்ள தங்காய்,

உனது கண்ணீரின் கடிதம் கிடைக்கப் பெற்றேன். அந்தக் கடிதத்தைக் கண்களில் கண்ணீர் மல்கிய நிலையில் சில தடவைகள் வாசித்தேன்.

உனது உயிரை மாய்த்துக்கொள்ளும் பொருட்டாக எலி மருந்தை நீ பருகவிருந்த இறுதி சமயத்தின்போது கர்த்தர் தம்முடைய கிருபையின் ஏதுவாக "தேவ எக்காளம்" பத்திரிகை ஒன்றைப் பயன்படுத்தி அதன் மூலமாக உனது கொடிய தீச்செயலின் முயற்சியைத் தடுத்து உன்னை ஜீவனோடு காத்துக்கொண்டமைக்காக ஆண்டவரை நன்றிப்பெருக்கோடு ஸ்தோத்திரிக்கின்றேன்.

உனது கடிதத்தை ஆண்டவருடைய பாதபடிகளில் விரித்து வைத்து உள்ளம் உருகிக் கர்த்தர் உனக்கு இரங்கி நன்மை செய்யும்படியாக ஜெபித்துக் கொண்டிருக்கின்றேன்.

உனது விலையேறப்பெற்ற நித்திய ஜீவனை எலி மருந்தின் மூலமாக நிர்மூலமாக்கி அதின் மூலம் உன்னை முடிவில்லா யுகா யுகங்களாக நித்திய அக்கினிக் கடலில் துடிதுடிக்கச் செய்யத் திட்டமிட்டுள்ள சாபப் பிசாசைக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமை நிறைந்த ஜீவனுள்ள நாமத்தில் சபிக்கின்றேன்.

"கர்த்தர் எனக்கு இரங்கி எனது திருமண காரியத்தைச் சீக்கிரம் கைகூடப்பண்ணாத பட்சத்தில் இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாக நான் எலி மருந்தை உண்டு என் உயிரைப் போக்கிக்கொள்ளுவேன்" என்று குறிப்பிட்டுள்ள வார்த்தைகள் என்னை நடுநடுங்கப்பண்ணின.

உனக்கு உடனே கடிதம் எழுதத் துடி துடித்து உன்னுடைய முகவரிக்காக உனது கடிதத்தில் தேடினேன். ஆனால், நீ உனது முகவரியை எழுதாமல் மறைத்துக்கொண்டாய்.

எந்த நிலையிலும் நீ இவ்வித தற்கொலைக்கு உன்னை உட்படுத்திக் கொள்ளாதபடி உன்னை நோக்கிக் கண்ணீருடன் கெஞ்சுகின்றேன்.

இந்த எலி மருந்தோடு உனது அனைத்துப் பாடுகளும், வேதனைகளும், துன்ப துயரங்களும் யுகா யுகத்திற்கென்று ஒரேயடியாக முற்றுப்பெறுவதாயிருந்தால் அந்த முயற்சியை நான் அகங்குளிர

வரவேற்பேன். ஆனால், அந்தோ! எலி மருந்தின் மூலமாக உனது பூவுலக வாழ்வின் முடிவை நீ தெரிந்து கொண்டு மரித்த அடுத்த வினாடியில் எரிநரகின் அக்கினியின் அரவணைப்பில் அல்லவா நீ உன்னைக் கண்டு துடி துடிப்பாய்.

அன்புள்ள தங்கையே, எதற்கும் ஆத்திரம் கொள்ளாதே. "ஆத்திரம் பிசாசினிடமிருந்து வருகின்றது" (Hurry comes from the devil) "ஏழு ஆண்டு காலம் ஆகியும் கலியாணம் நடக்க வில்லை. இது கர்த்தர் உன்னை நேசிக்கவில்லை என்பதற்கு அப் பட்டமான அடையாளம். ஆகையால் உடனே விஷத்தைக் குடித்து செத்து மடிந்துபோ". இப்படி உன் காதிற்குள் சொல் லும் சத்துருவை வன்மையாகக் கடிந்துகொள். அவனது தந்திர மான தீய ஆலோசனைக்கு எந்த நிலையிலும் செவிகொடாதபடி நீ விழிப்புடன் எச்சரிக்கையாயிரு. அவன் ஆதி முதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான். (யோவான் 8:44) உனது ஆத்துமாவை நஷ்டப்படுத்தி நித்திய நரகிற்கு உன்னைத் தள்ளு வதே அவனது தீர்க்கமான குறிக்கோளாகும்.

உன்னுடைய காரியத்தில் ஆண்டவர் தாமதம் காண்பிக்கின் றார். ஆனால் அந்த தாமதம் உனது நித்திய நன்மைக்கேயன்றிப் பிறிதொன்றிற்குமல்ல என்பதை மறந்துவிடாதே. கர்த்தர் உன்னை அதிகமாக நேசிக்கின்றார், எனவே கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திரு. அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர் கள் பாக்கியவான்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு ஏற்ற காலத்தில் இரங்குவார். நீ மாத்திரமல்ல, உன்னைப்போன்று எத் தனையோ கிறிஸ்தவ வாலிபப் பெண்கள் வரதட்சணையின் கொடு மையால், போதுமான பணவசதியின்றி திருமணமாகாமல் கண்ணீ ருடன் காத்திருக்கின்றனர். இப்படிக் காத்திருந்து திருமணத்திற் கான குறிப்பிட்ட வயதைக் கடந்துவிட்டமையால் மனமகிழ்ச்சி யுடன் இறுதிவரைக் கன்னியராய் இருந்து விட்டவரும்கூடப் பலருண்டு.

"ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?" (அப். 9:6) என் வாழ்வைக் குறித்ததான உம்முடைய மேலான தீர்மானம் என்ன? என்று ஆண்டவரிடம் கெஞ்சிக் கேள். உன் னைக் குறித்த தேவ நோக்கம் மகிமை பொருந்திய ஒன்றாகவிருக்கும் போது, அழிந்துபோகும் மனுக்குலத்தின் மீட்புக்கென்று அந்த இள மையைத் தேவன் பிரயோகிக்கச் சித்தம் கொண்டு ஆசை கொள் கையில் அதை நீ இடைமறித்து வேறு வழியை நீ தெரிந்து கொண்டு மாம்சத்தின் பாதையில் உன்னை ஈடுபடுத்த முயற்சிப்பா யானால் நீ உன்னையே உருவக் குத்திக்கொண்ட நிலையை வெகு துரிதமாய்க் கண்டு துயரடைவாய். "அவருடைய ஆலோசனைக்குக் காத்திராமல், வனாந்திரத்திலே இச்சையுள்ளவர்களாகி, அவாந்திர

வெளியிலே தேவனைப் பரீட்சை பார்த்தார்கள். அப்பொழுது அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார்" (சங். 106:13-15) கர்த்தர் உனக்குச் செய்வதெல்லாம் உனது நித்திய ஆசீர்வாதத்திற்கேயன்றிப் பிறிதொன்றிற்குமல்ல என்பதைப் பரிபூரணமாக விசுவாசி, அவர் உனக்குச் செய்வது இன்னது என்று இப்பொழுது நீ அறியமாட்டாய், காலப்போக்கில் அறிந்து நேசரை ஸ்தோத்திரிப்பாய். (யோவான் 13:7)

நீ ஒரு கர்த்தருடைய பிள்ளையாக விருந்தபோதினும் தற்கொலைக்கு உன்னைப்பலமாகத் தூண்டும் பிசாசானவனை நீ உன் உள்ளத்திற்குள் அனுமதித்ததைக் குறித்து நான் மிகவும் ஆச்சரியமடைகின்றேன். நான்று கொண்டு யூதாஸ் சாவதற்கு முன்னர், அந்தக் கொடிய தீச்செயலுக்கு அவனை வழிநடத்திய சாத்தான் அவனுக்குள் புகுவதை யோவான் 13:27-ல் நாம் காண்கின்றோம். தற்கொலையை நீ விரும்புகிறாய் அதாவது மரணத்தை நீ ஆசிக்கின்றாய் என்றால் அதின் பொருள் யாதெனில் நீ ஆண்டவரை வெறுக்கின்றாய் என்பதாகும். "என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள்" என்று நீதிமொழிகள் 8:36-ல் நாம் பார்க்கின்றோமே! ஆண்டவரை வெறுக்கும்படியான சூழ்நிலைகளுக்கு உன்னை வழிநடத்தியது உனது ஜெபக் குறைவேதான். உனது ஜெபவாழ்வு அஸ்தமனமானபடியாலேயே தற்கொலை முயற்சியை நீ விரும்புகின்றாய். "உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" (யோவா. 13:37) என்ற பேதுரு தன் அன்பின் கர்த்தரை வெறுக்கவும், மறுதலிக்கவும், சபிக்கவும் தூண்டியதன் காரணம் கெத்செமனேயில் இரட்சகருடன் விழித்திருந்து ஜெபிக்காததினால் தானே!

அன்புள்ள தங்கையே, "நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக" (எண். 23:10) என்பதே எப்பொழுதும் உன் இதயக் கதறுதலாயிருப்பதாக. தற்கொலை புரிவது மிக, மிக எளிது. சில நொடிகளுக்குள் அது முற்றுப் பெறக்கூடிய நிகழ்ச்சியாகும். ஆனால், அதின் பின் விளைவுகள் வார்த்தைகளின் விவரிப்புக்கு அப்பாற்பட்ட கொடிய பயங்கரமாகும்.

என் வீட்டிலுள்ளவர்கள் எல்லாரும் என்னை உக்கிரமாகப் பகைக்கின்றார்கள், என்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்று உனது லட்டரில் குறிப்பிட்டிருந்தாய். அதையிட்டு துயரடைந்து சோர்ந்துபோகாதே. சில தினங்களுக்கு முன்னர் 105-ம் சங்கீதத்தை நான் வாசித்துத் தியானித்துக் கொண்டிருந்தேன். "தம்முடைய ஜனங்களைப் பகைக்கவும், தம்முடைய ஊழியக்காரரை வஞ்சனையாய் நடத்தவும், அவர்களுடைய இருதயத்தை மாற்றினார்" என்ற 25-ம் வசனம் என்னைப் பலமாகத் தொட்டது. அந்த

சங்கீதத்தின் இறுதி வசனம் தேவ ஜனத்தின் மேன்மையான ஆசீர்வதிக்கப்பட்டதோர் சுதந்திர நிலையுடன் முடிவுறுவதைக் கண்டு ஆண்டவரை ஸ்தோத்திரித்தேன்.

உன்னைப் பகைக்கவும், உன்னை வஞ்சனையாய் நடத்தவும் அதின் முடிவில் உன்னை நிறைவாக ஆசீர்வதிக்கவும் கர்த்தரே உன் வீட்டாரின் இருதயத்தை மாற்றியிருப்பாரானால் அதற்காக நீ அவரை உளங்குளிர ஸ்தோத்திரிக்கலாமல்லவா?

கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருளிச்செய்வார்.

கர்த்தர் தாமே இந்த திறந்த கடிதத்தின் மூலமாக உன்னோடு பேசவும், உனக்குச் சமாதானத்தைத் தந்தருளவும் ஜெபிக்கின்றேன். ஜெபத்தோடும், தேவ ஒத்தாசையோடும் இந்தக் கடிதம் உனக்கு எழுதப்பட்டு எனது கரங்களைவிட்டுக் கடந்துவருகின்றது.

அன்பின் இரட்சகர் உன் கவலைகள் யாவையும் தீர்த்து, உன் துயரக் கண்ணீரைத் துடைப்பாராக. எந்நிலையிலும் நீ தேவ அன்பிலிருந்து மருளவிழுந்து கொடிய ஆக்கினையை நீயே உனக்கென்று வருவித்துக்கொள்ளாதபடிக் கர்த்தருடன் ஜெப ஜீவியத்தில் உறுதியாக நிலைத்திரு.

தொடர்ந்து தேவ கிருபையின்படி உனக்காக மன உருக்கத்துடன் ஜெபித்துக் கொண்டிருக்கின்றேன்.

தாவீதும் யோபும் யோசேப்பும்
அநேக நீதிமான்களும்
உன்னிலும் வெகுவாய்
கஸ்தி அடைந்தும், பக்தியில்
வேரூன்றி ஏற்ற வேளையில்
வாழ்ந்தார்கள் பூர்த்தியாய்.

பொறுக்கு மணிகள்

சகோதரனே, சகோதரியே வாழ்க்கையின் நோக்கம் இன்னதென்று அறியாமல் திகைக்கிறாயா? நீ உலகத்தில் வைக்கப்பட்டிருப்பதன் ஒரே நோக்கம் முதலில் “இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்” என்ற அனுபவத்தை (கலா. 2:20) அடைவதும், அதற்கப்பால், நித்திய நரகத்துக்கு நேராய்ச் சென்றுகொண்டிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும் பார்த்து “சகோதரனே, சகோதரியே உனக்குப் புதிய எருசலேமின் மகிமையான நித்திய வாழ்வை அளிப்பதற்காக ஈனச் சிலுவையில் நீசனைப்போல் தொங்கி மரித்த நேச மீட்பரண்டை வா” என்றழைப்பதுமே. இதைத்தவிர வேறெவ்வித வாழ்க்கையும் இறுதியில் பயனற்றதும், பாழுமாகவே முடியும்.

S. D.

அழகிய உலகினை சிருஷ்டித்த அன்பின் சிருஷ்டிகரை என் இதய இரட்சகராக ஏற்றுக்கொண்டேன்.

"ஆல்ப்ஸ் மலைகளுக்கு மேலாக நாம் பறந்து சென்று கொண்டிருக்கிறோம்" என்று விமானப் பணிப்பெண் மிகவும் பரவசத்துடன் அறிவிப்பு கொடுத்தாள். அவளது வார்த்தைகளைக் கேட்டதும் நான் விமானத்தின் ஜன்னலுக்கு நேராக விரைந்து சென்று கண்ணாடி வழியாகக் கீழே நோக்கினேன். ஆ, எத்தனை பரவசக் காட்சி அது! மத்தியான சூரிய ஒளியில் பனி மூடிய ஆல்ப்ஸ் மலைத் தொடர்கள் பள, பளத்து மின்னிப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. இந்த மாட்சிமையான அழகுக் காட்சி வெகு துரிதமாக மறைந்து போயிற்று. நான் பயணம் செய்து கொண்டிருந்த ஜெட் விமானம் சற்று நேரத்தில் பெரும் மேகக்கூட்டங்களின் ஊடாகச் சென்று கொண்டிருந்தது. பெரிய மலைகளாக அந்த மேகக்கூட்டங்கள் வான வீதியில் மிதந்து சென்று கொண்டிருந்தன. அவைகளையெல்லாம் நான் கண்ணோக்கியபோது "இவற்றையெல்லாம் உண்டாக்கியவர் யார்?" என்ற கேள்வியை நான் எனக்குள் கேட்கத் தொடங்கினேன்.

விமானத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்த என்னுடன் நான் அதிகமாக நேசித்த எனது அன்புக்குரிய தெய்வங்களும் பிரயாணம் செய்து கொண்டிருந்தன. அவைகளை நான் என்னுடைய கைப்பெட்டிக்குள் (SUITCASE) பத்திரமாக வைத்துப் பூட்டியிருந்தேன். பிராமண குலத்தில் பிறந்து வளர்ந்த என்னைப் பக்தி நெறியில் ஜீவிக்க உதவிய தெய்வங்கள் அல்லவா அவைகள்! அவற்றை நான் எப்படி வீட்டிலே விட்டு விட்டு வரமுடியும்? உயர் கல்வி கற்பதற்காக இங்கிலாந்து சென்று கொண்டிருந்த நான் எனது தெய்வங்களையும் என்னுடனேயே கொண்டு சென்று கொண்டிருந்தேன்.

இங்கிலாந்திற்கு நான் வந்தபோது அந்த நாட்டின் தென்பகுதியிலுள்ள புகழ்பெற்ற கடற்கரைப் பட்டணத்தின் கல்லூரி ஒன்றில் நான் சேர்ந்தேன். என்னுடைய கல்வியையும், கல்லூரி வாழ்க்கையையும் நான் மிகவும் விரும்பி நேசித்தேன். என்னுடன் கல்வி பயின்ற என் உடன் மாணவர் குழாமையும் (COMPANY) நான் நேசித்தேன். அவர்கள் நல்ல யூகமுடையோராயும், கடின உழைப்பாளிகளாயும், சிநேக பாசமுடையவர்களாயும் என்மேல் அன்பு காட்டக்கூடியவர்களாயுமிருந்தனர். கட்டுப்பாடற்ற, மிகவும் எதேச்சையான அவர்களது நடத்தைகளினிமித்தமே நான் அவர்களை அங்கீகரிக்க மனமற்றவனாகக் காணப்பட்டபோதினும் நான் என்னுடைய உள்ளத்தை ஆராய்ந்து பார்த்தபோது நான் அவர்களிலும் எதிலும் நல்லவன் அல்ல என்பதைக் கண்டு கொண்டேன்.

நான் கல்வி பயின்ற கல்லூரிக்கு எதிர்த்தாற்போலவே நான் தங்கியிருந்த வீடும் இருந்தது. உண்மையில் அது எனது சொந்த வீட்டைப்போலவே எனக்கிருந்தது. நான் பணம் கொடுத்து அந்த வீட்டில் தங்கியிருந்தபோதினும், அவ்வீட்டின் அம்மையார் தனது சொந்த மகளைப்போலவே என்னை அன்புடன் நேசித்து நடத்தினார்கள். நான் அவர்களை "சிறிய தாயார் சாரான்" என்றே அன்புடன் அழைத்தேன். ஒவ்வொரு நாள் சாயங்காலமும் நான் எனது கல்லூரியிலிருந்து என்னுடைய அறைக்கு வந்ததும் என்னுடைய தெய்வங்களை நான் பவித்திரமாக வணங்கி வழிபட்டேன். இந்தப் பழக்கத்தை நான் மிகவும் கிரமமாக இரண்டு ஆண்டு காலம் கடைப்பிடித்தேன்.

ஆனால், சந்தேகங்களும், கேள்விகளும், குழப்பங்களும் ஏற்கெனவே என் மனதிற்குள் நுழைந்திருந்தன. இவைகளெல்லாம் ஏன் எனது உள்ளத்திற்குள் எழுந்திருந்தன? நான் இவற்றைக் குறித்து ஆச்சரியமுற்றேன். குழந்தைப்பருவத்திலிருந்து நான் கடைப்பிடித்து வந்ததான எனது மார்க்கத்தைக் குறித்து நான் வினா எழுப்பினேன். எனது சந்தேகத்திற்கு எதிராக நான் போராட்டம் நடத்துவது எனக்கு மிகவும் பிடித்தமற்றவொன்றாகவிருந்தது. காலம் கடந்து சென்றது. எனது குழப்பமான பாதையில் நம்பிக்கையின் எவ்வித ஒளிக்கதிரும் வீசவில்லை.

ஒரு ஆங்கில வசந்த காலம் மிகவும் அசாதாரணமான சமாதானத்துடன் காணப்பட்டது. என் கைவசமிருந்த எனது தெய்வங்களுக்கு ஏறெடுக்கவேண்டிய வணக்கங்களைக் கிரமமாக பக்திவினயத்துடன் ஏறெடுத்த பின்னர் எனது அறையின் ஜன்னலைத் திறந்தேன். வெளியே உள்ள ஆகாயம் மிகவும் குளிராயும், உடம்பைத் துளைக்கும் சில்லெனவும் இருந்தது. வானம் தெளிவாகவும் இருள் சூழ்ந்ததாகவுமிருந்தது. வானத்தை நான் நோக்கினேன். உறைபனியின் வெண்மையான தூய பிரகாசத்துடன் நிலவு காய்ந்து கொண்டிருந்ததையும், அழகு நட்சத்திரங்கள் வெட்டிப் பிரகாசித்துக் கொண்டிருந்ததையும் எனது கண்கள் பேராச்சரியத்துடன் உற்றுநோக்கின. "இவைகளையெல்லாம் உண்டாக்கியது யார்?" என்று நான் எனக்குள்ளேயே மீண்டுமாகக் கேட்டேன். நான் இயற்கையின் அழகையும், வடிவமைப்பையும், சீரான ஒழுங்கையும், சமநிலைப் பிரமாணத்தையும் கண்ணுற்றேன். எல்லையற்ற அகண்ட விண்வெளிப் பரப்பில் சுழன்று கொண்டிருக்கும் பிரமாண்டமான கிரகங்களையும், கோடானு கோடி நட்சத்திரங்களையும் அங்கு நிலைவரப்படுத்தி அதினதின் இடங்களில் சுழலச் செய்தது எப்படி என்பதனை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. "இவற்றையெல்லாம் சிருஷ்டித்தவர் நிச்சயமாக மகிமை பொருந்தியவராகவும், நித்திய வாசியாக அதாவது ஊழி, ஊழிகாலம் வாழ்பவராக இருத்தல் வேண்டும்" என்று நான் நிச்சயித்தேன்.

இதையடுத்து எனது அன்பான தெய்வங்களை நான் பார்த்தேன். அவைகள் அழகற்றனவாகவும், அசாதாரணமான விகாரத் தோற்றமுடையனவாகவும், அவற்றில் சில பாதி மனித ரூபமும் மறுபாதி மிருக சாயலாகவுமிருந்தன. ஜீவிக்கின்ற உண்மை தெய்வம் ஒருவர் கட்டாயம் இருக்கவே இருக்கின்றார் என்று நான் இச்சமயம் ஊர்ஜிதப்படுத்திக் கொண்டேன். இதையடுத்து நான் எனது அன்பான விக்கிரகங்களை அள்ளி எடுத்து வீசி எறிந்து போட்டு, அவற்றை வழிபடுவதையும் நிறுத்திக்கொண்டேன்.

ஜீவிக்கின்ற மெய் தேவன் ஒருவர் உண்டு என்று நான் என்னளவில் ஒத்துக்கொண்டதற்குப் பின்னர் அந்த தேவன் என் இருதயத்தை நேரடியாகப் பரிசோதிக்கத் தொடங்கினார். இந்தப் பரிசோதிப்பினிமித்தமாக நான் மன அமைதியற்றவனாகவும், என் வாழ்வில் ஏதோ ஒன்றை இழந்து தவிப்பவனாகவும் காணப்பட்டேன். என்னைச் சரியான ஆவிக்குரிய நிலையில் வழிநடத்த நான் கல்வி பயின்ற கல்லூரியிலோ அல்லது வெளியிடத்திலோ ஆவிக்குரிய சிந்தையுடைய சிநேகிதர்கள் எவரும் எனக்கில்லாதிருந்தனர். எனக்கு ஆத்மீக நிலையில் உதவி செய்யக்கூடிய ஒரு ஆளை நான் ஆவலுடன் தேடினேன்.

இதைத் தொடர்ந்து ஆங்கிலத் திருச்சபையினர், மெதடிஸ்ட்டுகள், யூனிட்டேரியன்கள் போன்றவர்களின் ஆராதனைகளிலெல்லாம் நான் பங்கெடுத்தேன். ஆனால், அங்கு பிரசங்கிக்கப்பட்ட செய்திகளும், அவ்விடத்தில் நிலவிய சூழ்நிலையும் எனக்குக் குழப்பத்தையும், அதிருப்தியையும் அளித்தன.

நான் தங்கியிருந்த வீட்டிற்குச் சமீபத்தில் ஒரு ஆலயம் இருந்தது. அதின் போதகரண்டை நான் சென்று என் உள்ளத்தில் எழுந்துள்ள போராட்டச் சூழல்களை எடுத்துரைத்தேன். நான் கூறியவற்றையெல்லாம் அவர் மிகவும் பொறுமையுடன் கவனித்துக் கேட்ட பின்னர் தம்முடைய வீட்டிற்கு வரும்படியாக அவர் என்னை அன்புடன் அழைத்தார். நான் அவருடைய வீட்டிற்குச் சென்றபோது அவர் என்னை மிகுந்த அன்புடன் ஏற்று உபசரித்தார். இரண்டாம் முறையாக நான் அவரிடம் சென்றபோது தம்முடைய வேதபுத்தகத்தைத் திறந்து தேவனைக் குறித்து எழுதப்பட்டுள்ளதான பகுதிகளையெல்லாம் அவர் எனக்கு வாசித்துக் காண்பித்தார். அந்த அன்புள்ள போதகர் சாயங்காலம் தொடங்கி இரவின் பிந்திய மணி நேரங்கள் வரை என்னருகில் அமர்ந்து வேதாகமத்திலிருந்து தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் குறித்தும், அவருடைய மகத்தான அன்பைக் குறித்தும் விவரித்துக் கூறினார். ஆ, அந்த அன்புள்ள போதகருக்கு எத்தனை அன்பும், அக்கறையும், என்மீது இருந்ததென்று எண்ணுகின்றீர்கள்! கிறிஸ்து பெருமான் மூலமாயுள்ளதான ஆச்சரியமான தேவ அன்பின் செய்தி என் உள்ளத்

லைதக் கவர்ந்தது. படிப்படியாக அந்தப் போதகர் கிறிஸ்து பெருமானைக் குறித்து அதிகமாக எனக்குக் கூறினர். இயேசுகிறிஸ்து யார்? அவர் ஏன் இவ்வுலகிற்கு வந்தார்? என்ற காரியங்களையெல்லாம் விஸ்தாரமாகக் கற்பித்தார். வேதாகமத்திலிருந்து அதிகமான பகுதிகளை எனக்கு வாசித்துக் காண்பித்தார். அவர் வாசித்துக் காட்டிய அந்தப் புத்தகம் உண்மையுள்ளதாக எனக்குத் தெரிந்தது.

இந்த நடபடிகளுக்குப் பின்னர் நானும், அந்தப் போதகரும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை ஒருவரையொருவர் சந்திக்கவேயில்லை.

அது ஒரு கோடைகாலம். மிக ரம்மியமான ஆங்கில கோடைகாலமது. சீதோஷ்ண நிலை வறட்சியாகவும், கணகணப்பாகவுமிருந்தது. எனது கல்லூரி கோடைகாலத்தின் பொருட்டு மூடப்பட்டது. எனவே நான் ஸ்காட்லாந்துக்கும், வேல்ஸ் நாட்டிற்கும் பயணப்பட்டுச் சென்றேன். என்னுடைய பிரயாணம் இடையிடையே வாகனங்கள் மூலமாகவும், கால் நடையாகவும் அமைந்திருந்தது. மலைகளில் ஏறி, பள்ளத்தாக்குகளில் இறங்கி, பசும்புல் தரைகளின் மீதாகவும், நீரோடைகளின் கரையோரமாகவும் அநேக மைல்கள் நான் கால் நடையாக நடந்து சென்றேன். அவ்வேளைகளிலெல்லாம் நான் தேவனுக்கு மிகவும் சமீபமாகவிருப்பதை உணர்ந்தேன். இந்த அதிசய தேவனைக் குறித்து வேதாகமத்தில் நான் கேட்டறிந்தது எத்தனை சொற்பம் என்ற காரியம் என்னில் கிரியை செய்துகொண்டே இருந்தது. வேதபுத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்ட இரட்சகரை விசுவாசித்து அவர் பேரில் என் நம்பிக்கையை வைக்கும் நிலைக்கு நான் நெருங்கி வந்தேன். எனினும் கிறிஸ்து பெருமானுக்காக எனது இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்குச் சற்று தயக்கம் காண்பிப்பவனாகக் காணப்பட்டேன். ஆனால், தேவன் என்னைச் சும்மாவிடவில்லை, நான் அமைதியிழந்து தத்தளிப்போனாகவிருந்தேன். எனது வாழ்க்கையில் குறைவுபட்டுக் காணப்படுவது என்னவென்றும், அந்த மாபெரும் வெற்றிடத்தை நிரப்பக்கூடிய அன்பின் சொரூபி கிறிஸ்து இரட்சகரேயன்றி இவ்வுலகில் வேறொருவராலும் கூடாது என்றும் தேவன் எனக்குக் காண்பித்தார்.

முதலில் குறிப்பிட்ட போதகரண்டை நான் சென்று கிறிஸ்து இரட்சகரை நான் எனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதாகவும் அவரிலேயே எனது முழு நம்பிக்கையையும் நான் வைத்துவிட்டதாகவும் மகிழ்ச்சி பொங்கக் கூறினேன். கிறிஸ்துவுக்குள்ளான எனது தீர்மானம் உண்மையானதொன்ரு அல்லது போலியாவென்பதை அந்தப் போதகர் என்னில் பரிசோதித்தார். என்னுடைய மனமாற்றம் மெய்யானதொன்று என்பதை அறிந்த அவர் மிகவும் அகமகிழ்ந்தார். அவர் என்னோடு சேர்ந்து ஜெபித்துத் தேவனுக்கு நன்றி செலுத்தினர்.

என்னை இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்திய இந்த அன்புள்ள போதகராலேயே நான் ஞானஸ்நானம் பெற்றேன்.

நான் கிறிஸ்தவனாகிவிட்ட செய்தியை இந்தியாவில் பூனாவிலுள்ள என் பெற்றோருக்கு எப்படித் தெரிவிப்பது என்ற தடுமாற்றம் முதலில் என்னில் எழுந்தது. கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம். தேவன் எனக்குத் தமது பெலத்தையும், தைரியத்தையும் தந்தமையால் நான் பெற்றோருக்குத் தைரியமாக லட்டர் எழுதினேன். அவர்கள் மிகவும் மனதுயரம் அடைந்தபோதினும் கடிதத்தின் மூலமாக என்மீதான வெறுப்பையும், கோபத்தையும் காண்பிக்கவே இல்லை.

இதற்கப்பால் தேவ நடத்துதலின்படி இரண்டு ஆண்டுகாலம் இங்கிலாந்திலுள்ள ஒரு வேதாகமக் கல்லூரியில் இறையியற் கல்வி பயின்றதுடன், அமெரிக்கா சென்று மற்றும் இரண்டு ஆண்டுகாலம் மொழிக்கல்வியும் பயின்று இந்தியா திரும்பினேன். கிறிஸ்தவப் புத்தக வெளியீட்டுக் கழகம் ஒன்றில் நான் தற்போது பணிபுரிந்து வருகின்றேன். கிறிஸ்தவப் பிரசுரங்கள் வாயிலாக ஆண்டவருக்கு ஊழியம் செய்யும் சிறப்பான சிலாக்கியத்தை நான் பெற்றுள்ளமையால் அவருக்கு நன்றி செலுத்துகின்றேன்.

எனது இந்து மார்க்கத்திய பெற்றோருடனேயே நான் தங்கியிருக்கின்றேன். ஜீவனுள்ள தேவனாகிய கிறிஸ்துவைக் குறித்தோ அல்லது அவருடைய அதிசய வார்த்தைகளைக் குறித்தோ அவர்களுக்கு எவ்விதமான பற்றும், பாசமும் கிடையாது. ஆனாலும் பிள்ளை என்றதான என்னைப்பற்றிய அவர்களின் பாசம் அவர்களில் அப்படியே உள்ளதை நான் காண்கின்றேன். சிற்சில சமயங்களில் நான் கிறிஸ்தவனாகிவிட்ட காரணத்தினிமித்தமாக என் இனஜனங்களால் உண்டாகும் நிந்தை, பரியாசங்களையும் அவர்கள் என்னிமித்தமாக அடைகின்றதை நான் துயரத்தோடு நோக்குகின்றேன். இவற்றின் மத்தியிலும் அவர்கள் என்னை நேசிக்கின்றார்கள். இந்த அருமையான அன்பு என்னைக் கவருகின்றது. என் அன்புள்ள பெற்றோரும் கர்த்தரைக் கண்டடையும் பொருட்டாக ஊக்கமாக ஜெபிக்கின்றேன்.

கர்த்தர் நல்லவர் என்பதை நான் என் வாழ்வில் ருசித்துக் கண்டு கொண்டேன். அந்த கிறிஸ்து இரட்சகரை நீங்களும் உங்கள் வாழ்வின் நாயகராகக் கொள்ளுவீர்களானால் பாக்கியசாலிகளாயிருப்பீர்கள்.

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்; அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங். 34:8)

DILIP, S. PHANSALKAR.

உங்கள் உருக்கமான அன்பின் ஜெபம் எதிர்நோக்கி..........!

சிறந்த மிஷனரியும், ஆப்பிரிக்காவில் இரத்த சாட்சியாகக் கிறிஸ்து பெருமானுக்குத் தனது ஜீவனையே ஆப்பிரிக்காவில் தியாக பலியாக ஒப்புக்கொடுத்த பிஷப் ஹானிங்டனுக்குப் பதிலாளாக அவரது இடத்திற்கு அனுப்பப்பட்டவர்தான் டக்கர் என்ற தேவபக்தன். டக்கர் ஒரு ஓவியக் கலைஞராக லண்டனில் வாழ்ந்து வந்தார். அவருக்குப் புகழைக் கொண்டுவந்த படங்களில் ஒன்று அவர் வரைந்த "பாழ்நிலை" என்ற தலைப்பிலான படமாகும். லண்டன் பட்டணத்தின் பெண்ணொருத்தி தனது தகப்பனற்ற குழந்தையை அந்த மாபெரும் பட்டணத்தின் தெருவழியாக இழுத்துக் கொண்டு வரும் காட்சியை டக்கர் அந்தப் படத்தில் சித்தரித்திருந்தார். அழுது கண்ணீர் சிந்தி, சிந்தி அப்பெண்ணின் முகம் வீங்கிப்போயிருந்தது. முழு உலகமே அப்பெண்ணுக்கு நட்சத்திரங்களற்ற இருண்ட இரவாகக் காட்சி அளித்தது. டக்கரின் இந்த அதி உன்னத ஓவியம் இறுதியாகக் கலைக்கூடத்தில் தொங்கவிடப்பட்டு உலகப் புகழையும் தட்டிப்பறித்துக் கொண்டது.

ஆனால், கர்த்தர் டக்கருடன் பேசினார். "உலகத்தின் பாடுகளையும், வேதனைகளையும் வெறுமனே கித்தான் துணியில் (Canvas) வரைந்து சித்தரிப்பதைவிடத் தன்னளவில் சென்று அவற்றின் ஒரு பகுதியை நீக்கும்படியாகக் கர்த்தர் டக்கரிடம் கேட்டார்". உடனே டக்கர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து லண்டன் நகரின் இருள் சூழ்ந்த சேரிப் பகுதிகளுக்குத் தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்தை அளித்தற்பொருட்டாகத் தன்னையே ஒப்புவித்தார். இதன் பின்னர் ஆப்பிரிக்காவின் மிஷனரியான பிஷப் ஹானிங்டன் சுதேசிகளால் படுகொலை செய்யப்பட்ட செய்திவந்து எட்டினது. ஹானிங்டனுக்குப் பதிலாளாக ஒருவர் தேவைப்பட்டது. "ஆண்டவரே, லண்டன் பட்டணத்தின் சேரிப் பகுதிகளில் நிலவியுள்ள பாவ இருளினும் அதிகக் கேடான இருள் அந்த ஆப்பிரிக்காவில் இருக்கும் பட்சத்தில் நான் அங்கு செல்லுவேன்" என்று டக்கர் கதறினார். தன்னுடைய முகத்தைக் கற்பாறையைப்போலாக்கி அவர் ஆப்பிரிக்காவினுக்குச் சென்றார்.

தன்னுடைய மிக அருவருப்பான மாமிச இச்சைகளுக்கு ஒப்புக்கொடுக்க மனமற்றச் சின்னஞ்சிறுவர்களைக் கழுமரத்தில் ஏற்றி எரித்துச் சாம்பலாக்கிய முவாங்கா என்ற மிருகத்தனமான அநாகரீகத் தலைவனின் எல்கைக்குள்ளேயேதான் டக்கர் முதன் முதலில் காலெடுத்து வைத்தார். ஆனால் நாட்கள் வந்தன. மேற்குறிப்பிட்ட ஆகாமிய அருவருப்புகள் நடந்த அதே இடத்திலேயே உலகத்தின்

பெரிய தேவாலயங்கள் தோன்றலாயின. 5000 பேர்களுக்கும் அதிக மான மனந்திரும்பிய ஆப்பிரிக்க மக்களால் அந்த ஆலயங்கள் நிரம்பி வழிந்தன. ஆப்பிரிக்க சுதேசிகளால் நிறைந்த நூற்றுக் கணக்கான சிற்ருலயங்கள் நாடெங்கும் எழுந்தன. தனது ஜீவனே அதற்கு விலைக் கிரயமாகிவிட்டபோதினும் ஹானிங்டன் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். "தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்" (மாற்கு 8:35) என்று அருமை இரட்சகர் கூறினுர். டக்கர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார், கர்த்தர் அவரை ஆப்பிரிக்காவுக்கு அனுப்பினுர். நீ ஆண்டவருக்குக் கீழ்ப்படிவாயா?

கர்த்தருக்குச் சித்தமானுல் இன்னும் சில மாதங்களில் நான் மேற்கொள்ளவிருக்கும் வட இந்திய ஊழியங்களுக்காகத் தயவாக ஊக்கத்துடன் ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவனது சுவிசேஷம் எட்டாத மிகத் தொலைவான இமயமலைகளின் பகுதி ஒன்றினுக்கு இந்திய நாட்டின் எல்கையைத் தாண்டி நான் இம்முறை செல்லவிருக்கின்றேன். கர்த்தர் தாமே அவசியமான சுகபெலனைத் தரவும், பிரயாணத்தை வாய்க்கச் செய்யவும், இயற்கையை அனுகூலமாக்கித் தரவும், தேவையான பிறமொழிச் சுவிசேஷப் பகுதிகளை அளிக்கவும், ஏராளமான ஆத்துமாக்களைக் கொள்ளைப்பொருளாகத் தரவும் உங்கள் உருக்கமான அன்பின் ஜெபங்களுக்காக மன்ருடி நிற்கின்றேன்.

ஒரே ஒரு பூவுலக வாழ்க்கையைப் பெற்றுள்ள நாம், அந்த நீர்மேற்குமிழி வாழ்வு திடீரென முற்றுப் பெறுவதற்கு முன்னர் நமது அருமைக் கண்மணியாம் கர்த்தருடைய ஜீவனுள்ள மகிமையின் சுவிசேஷத்தை நம்மால் முடிந்த அளவில் அனைத்து இடங்களுக்கும் எடுத்துச் சென்று அவரது பரிசுத்த நாமத்தை உலகினுக்கு உயர்த்திக் காண்பித்து நமது ஓட்டத்தை ஓடி முடிப்போம்.

(௨-ம் பக்கத் தொடர்ச்சி)

தோஷத்தையும் பல ஆண்டுகளுக்குப் பின்னரே கண்டடைந்த போதினும் சாது சுந்தர்சிங் என்னைப் பார்த்ததான அந்தப் பிரகாசம் நிறைந்த பரிசுத்த முகத்தின் தேவப் பார்வையே எனது இரட்சிப்புக்கு அடிப்படை அஸ்திபாரக் கல்லாக அமைந்துவிட்டது. கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம். அல்லேலூயா. சுந்தருக்குப் பின்னர் மீண்டும் ஒரு சுந்தரை இந்தியா காணவில்லை. இன்றைய உலகிற்குத் தேவை சாது சுந்தர்சிங் போன்ற பக்த சிரோன்மணிகள் மட்டுமே! K. NAVAMONEY DAVID.

மனுஷனைப் பரியாசம் பண்ணுகிறதுபோல பரியாசம் பண்ணுவீர்களோ? (யோபு 13:9)

இந்த விஸ்தார வையகத்தில் நாள்தோறும் எத்தனை, எத்தனையோ தீச்செயல்கள் நடைபெற்றுவருகின்றன. மண், பெண், பொன் போன்ற மூன்றினுக்காகத் தேவ சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்களின் இரத்தம் தினந்தோறும் தண்ணீரைப்போன்று தாராளமாகச் சிந்தப்பட்டுவருகின்றது. மனிதனை மனிதன் ஈவிரக்கமின்றி கொன்று குவிப்பது ஒரு பொழுதுபோக்கு விளையாட்டாகிவிட்டது.

தமிழ்நாட்டு நகரம் ஒன்றின் சிறைக்கூடம் ஒன்றில் கட்டுமஸ்தான மூன்று வாலிபர்கள் ஒவ்வொரு நாள் அதிகாலை நேரத்தையும் மரணத்திகிலின் எதிர்பார்ப்போடு கடத்திவருகின்றனர். ஒரு நாள் அதிகாலை வரும்; அன்று அவர்கள் மிகவும் பாதுகாவலுடன் அழைத்துச் செல்லப்பட்டுத் துடி துடிக்கும் தூக்கிலிட்டுக் கொல்லப்படுவார்கள். அவர்கள் செய்துள்ள கொடுங்குற்றங்களின் விளைவாக ஜனாதிபதியும்கூட அம்மக்களுக்குக் கருணை காட்டமுடியாத அளவுக்குச் சென்றுவிட்டது.

ஒன்பது பேர்கள் கொண்ட கொலைக்காரக் கும்பலில் முதலில் குறிப்பிட்ட மூவருக்கும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1970-ம் ஆண்டு தொடங்கி 1972-ம் ஆண்டு வரைத் தொடர்ந்து இந்தக்கும்பல் நடத்திய கொலை பாதகங்கள் தமிழ்நாட்டையே உலுக்கிவிட்டது. தங்களை மத்திய அரசு சுங்கவரி இலாக்கா அதிகாரிகள் என்று அறிமுகம் செய்து கொண்டு அதிகமான பணங்களை ரொக்கமாகத் தங்கள் கரங்களில் எடுத்துக்கொண்டு சென்னைக்கு வந்து பெரிய ஹோட்டல்களில் தங்கியிருந்த வசதியுள்ள மக்களைத் தனியிடங்களுக்குத் தந்திரமாக அழைத்துச் சென்று விஷ ஊசிகளைக்குத்தியும், உயிரைப்பலி கொள்ளும் நச்சு மாத்திரைகளை வலுக்கட்டாயமாக நிர்ப்பந்தித்துக் கொடுத்தும் கொன்று அவர்களின் பணங்களைக் கொள்ளையடித்தனர். விஷ ஊசிகள், மருந்துகளால் மயக்கப்பட்ட மக்களைத் தொலை தூர இடங்களுக்குக் காரில் வைத்துக்கொண்டு சென்று அம்மக்களைத் தீயிட்டுக் கொழுத்தியும், கழுத்தில் கயிற்றைக் கட்டி மரத்தில் தூக்கியும் கொன்றனர். இவ்விதமாக அவர்கள் ஒன்று இரண்டல்ல பத்துக் கோரக் கொலைகளைச் செய்தனர்.

அந்த சோகம் நிறைந்த துயர சம்பவங்களை விவரமாக எழுத இங்கு நான் விரும்பவில்லை. வாசிக்கும் ஒவ்வொரு மனிதனின் கண்களிலிருந்தும் கண்ணீரைத் தாரை, தாரையாக வடிந்தோடச்

செய்யும் துயர காவியம் அது. கொலைக்காரர்கள் இறுதியாக எப்படி காவல் அதிகாரிகளின் கரங்களில் வந்து சிக்கினார்கள் என்பதே ஒரு அதிசய சம்பவமாகும்.

இறுதியாக நீதிபதிக்கு முன்னர் ஒன்பது பேர்களும் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர். 723 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 1000 தஸ்தா வேஷுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. கொலை சம்பந்த மான ஆயுதங்கள், கருவிகள், பொருட்கள் முதலானவை 1759 கொண்டுவந்து நீதிபதியின் பார்வைக்கு வைக்கப்பட்டன.

மனித நீதி வழங்கப்பட்டது. மூவருக்குத் தூக்குத்தண்டனை யும், இதரர்களுக்கு ஆயுள் தண்டனைகள் போன்றவை வழங்கப் பட்டன.

கடந்த மாதம் ஒரு நாள் அதிகாலை நான் ஜெபித்துக் கொண் டிருந்தபோது தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட இந்த மூவரையும் குறித்து அன்பின் ஆண்டவர் மிகுந்த ஆத்தும பாரத்தையும் ஆழ மான உணர்த்துதலையும் எனக்குத் தந்தார். இதைத் தொடர்ந்து ஜெபத்துடன் இவர்களுடன் தொடர்பு கொண்டுவருகின்றேன். தேவ ஆலோசனைப்படியான கடிதங்கள் ஜெபத்துடன் எழுதப்பட் டுள்ளன. இரட்சிப்புக்கேதுவான புத்தகங்கள், துண்டுப்பிரதிகள், புதிய ஏற்பாடுகள் முதலானவைகள் இவர்களுக்கு அனுப்பப்பட் டுள்ளன. விசேஷமாக இவர்களை நேரில் சந்திக்க எனக்கு அனு மதி அளிக்குமாறு சிறைக்கூட உயர் அதிகாரிக்கு விண்ணப்பித்தி ருக்கின்றேன். கர்த்தர் தாமே இது விஷயத்தில் கிரியை நடப்பிக்க வும், உலக மனிதர்கள் அனைவரும் "கொலைக்காரர்கள்" என்று தங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டாலும் தங்களை நேசிக்கின்ற உண் மையான அன்பின் கர்த்தர் ஒருவர் உண்டு என்றும் அவர் தமது ஜீவனையே மிகுந்த அன்புடன் தங்களுக்காய் கல்வாரி மாமலையில் அர்ப்பணித்திருக்கின்றார் என்றும் "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்ற அவரின் அன்புக் குரலை என் மூலம் அவர்கள் கேட்கவும் தயவுசெய்து அன்புடன் ஜெபித் துக் கொள்ளுங்கள்.

"மனிதர்களைக் கெட்டவர்களாகவும், கெட்டவர்களை அதிகக் கேடுள்ளவர்களாகவும் ஆக்க பிசாசு முயற்சிப்பதில்லை. கிறிஸ்து இல்லாமல் தாங்கள் நல்லவர்கள்தான் என்று உணரச் செய்வதே அவன் வேலை".

"பாவ சந்தோஷங்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும்தான் நீடிக்கும். ஆனால், அதின் சம்பளம் நித்திய காலத்திற்குரியது.

கடந்து செல்லும் உலகினில் பறந்து செல்லும் மனிதர்களே நாம்!

“இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்; என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாததுபோலிருக்கிறது..... ”
(சங். 39:5)

“........இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள்” (1 பேதுரு 1:17)

யார் காலத்தின் அருமையை உணர்ந்து அற்பமானதும், பயனற்றதுமான வீண் சம்பாஷணைகளுக்கும், ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத விருதாவான போக்கு வரவுகளுக்கும் விலகித் தங்கள் காலத்தைப் பாதுகாக்கின்றார்களோ அவர்களுடைய சொந்த ஆத்தும ஈடேற்றத்திற்கும், ஆண்டவருடைய திருப்பணிவிடைகளுக்கும் போதுமான நேரத்தை உடையவர்களாயிருக்கின்றார்கள். காலம் யாருக்கு விலையேறப்பெற்றதும் அருமையானதுமாக இல்லையோ, யார் எவ்வித திட்டமுமின்றி ஒழுங்கின் அடிப்படை தவறி வாழ்கின்றார்களோ அவர்கள் எப்பொழுதும் பதஷ்டமுடையோராயும், தங்கள் வாழ்க்கையில் ஒரு காரியத்தைக்கூட நல்ல நோக்கத்தின் அடிப்படையில் செவ்வையாகச் செய்யும் திறனற்றோர்களாயுமிருக்கின்றனர்.

பூமியிலே தங்களுடைய நாட்கள் மிகவும் சொற்பம் என்று சிலர் முறையிட்டுக் கொள்ளுகின்றார்கள். அப்படியானால், உலகிலே தாங்கள் மரணமின்றி நெடுங்காலம் உயிர் வாழப்போவதாக எண்ணியாவது ஏதாவது பயனுள்ள காரியத்தைத்தான் அவர்கள் செய்யட்டுமே!

“நான் சிரித்தும் அழுது கொண்டிருந்ததுமான எனது குழந்தைப்பருவ நாட்களில் காலம் மெள்ள, மெள்ள ஊர்ந்து தவழ்ந்து சென்று கொண்டிருந்தது. நான் வாலிபத்தின் நாட்களுக்குக் கடந்துவந்து கற்பனை உலகில் மிதந்து கொண்டிருந்தபோது காலம் ஏறு நடைப்போட்டுச் சென்று கொண்டிருந்தது. நான் முழு மனிதனானபோதோ காலம் நாற்கால் பாய்ச்சலில் ஓடத் தொடங்கிவிட்டது. பின்னர் நான் விருத்தாப்பியத்தை எட்டியபோது காலம் இறக்கைவிரித்துப் பறந்துவிட்டது. இன்னும் நான் எனது வாழ்க்கைப் பாதையில் தொடர்ந்து முன்னுக்குச் சென்றபோது எனது காலங்கள் யாவும் கடந்து மறைந்துவிட்டதைக் கண்ணீரோடு கண்டேன். அப்பொழுது என் ஆத்துமா கிறிஸ்து இரட்சகரால் மீட்கப்பட்டதாயிருந்ததா? ”

(R. BAXTER)

பின் நாட்களில் மனங்கசந்து மன்னிப்புக்காக ஆண்டவர் சமூகத்தில் அபயக்குரல் எழுப்ப வேண்டியதாயிருக்கும் என்று நீ எண்ணும் எந்தப் பாவக் காரியத்திற்காகவும் உனது காலத்தைச் செலவிட்டு விடாதே. ஆண்டவருடைய ஆசீர்வாதத்திற்காகவும் நீ ஜெபிக்க முடியாத எதற்காகவும் உன் காலத்தை வீண் விரயமாக்கிவிடாதே. உனது மரணக்கட்டிலில் அமைதியான நல் மனச்சாட்சியுடன் உனது நினைவுக்குக் கொண்டுவந்து அதினிமித்தம் கர்த்தரில் சந்தோஷமடையக்கூடாத எந்தக் காரியத்திலும் உன் காலத்தைப் பிரயோஜனம் பண்ணிவிடாதே. மிகவும் ஜாக்கிரதையாகவும், கண்ணும் கருத்தோடும் நீ செய்து கொண்டிருக்கும் காரியத்தில் மரணம் உன்னை எதிர்பாராதவிதமாகச் சந்திக்கும் பட்சத்தில் உன் விலைமதிப்பற்ற ஆத்துமா எரிநரகிற்குச் செல்லவேண்டியதாகும் என்று நீ எண்ணும் எந்தக் காரியத்திலும் உன் நேரத்தை செலவிட்டு விடாதே.

நேசர் அழைக்கும் அன்புக்குரலை நீ கேட்கவில்லையா?

மக்கள் தங்களையும், மோட்சத்தையும், நரகத்தையும் குறித்த சத்தியத்தை அறிந்து கொள்ள உன்னால் முடிந்த ஒவ்வொரு காரியத்தையும் செய்.

“ நான் கர்த்தரால் அழைக்கப்படவில்லை ” என்று நீ சொல்லுகின்றாயா? அவரது அழைப்பின் அன்பின் குரலை என் காதுகள் இதுவரை கேட்கவில்லை என்று நீ சொல்லிவருகின்றாயா? நீ அப்படித்தான் சொல்லிவருவாய் என்று நான் நினைக்கின்றேன். உன்னுடைய பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டுவிட்டன என்று ஆண்டவர் உன்னிடத்தில் சொன்ன நாளிலிருந்து அவர் உன்னைச் சப்தமாகக் கூப்பிட்டு அழைத்துக் கொண்டிருக்கிறார். உன்னுடைய பாவங்கள் அனைத்தும் உனக்கு மன்னிக்கப்பட்டுவிட்டனவென்றால் நீ அருமை இரட்சகருடைய ஸ்தானாபதியாக இருக்கும்படியாக நான் உன்னைப் பார்த்துக் கெஞ்சி மன்றாடிக் கேட்கின்றேன். உன்னுடைய காதை வேதாகமத்தில் வைத்து பாவ அக்கினியில் கிடந்து துடி துடிக்கும் ஏழைப் பாவிகளண்டை நீ போய் அவர்களை அதிலிருந்து வெளியே இழுக்கும்படி அருமை இரட்சகர் உன்னை அழைக்கும் துயரக் குரலைக் கேள். பாவப்பாரம் சுமந்து தவிக்கும் மனக்கிலேசம் நிறைந்த மனுக்குலத்தினரிடம் உன் காதை வைத்து உதவிக்காக அவர்கள் எழுப்பும் பரிதாபகரமான அங்கலாய்ப்பின் தொனியைக் கேள். நரகத்தின் வாசலண்டைபோய் நின்று ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டோர் தங்கள் தகப்பன் வீட்டுக்குச்

சென்று அவர்கள் சகோதரர்களையும், சகோதரிகளையும், வேலைக்காரர்களையும், எஜமானர்களையும், நரக பாதாளத்திற்கு வந்து விட வேண்டாமென்று உன்னைப்பார்த்துச் சொல்லும் மன்றாட்டின் தொனியைக் கேள்.

கிறிஸ்து இரட்சகரின் முகத்தைப்பார். அவருடைய அன்பின் கிருபையைப் பெற்றிருக்கின்றேன் என்று அறிக்கையிடுகின்ற நீ, அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிப்பேன் என்று வாக்குறுதி அளித்துள்ள நீ, உனது ஆவி, ஆத்துமா, சரீரம், சந்தர்ப்ப சூழ்நிலைகள் யாவற்றோடும் இணைந்து உலக முழுமைக்கும் ஆண்டவரது கிருபையின் சுவிசேஷம் சென்று கொண்டிருக்கும் மகத்தான பவனியில் இணைந்து செயல்படு.

எழுந்திரு. அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு எழுந்து செயல்படு. அருமை இரட்சகருக்காக ஏதாவது காரியம் செய். அதனை உடனே செய். அதைச் செய்து கொண்டேயிரு. அதைச் செய்கையில் இடைபடக்கூடிய அனைத்து இடர்பாடுகளையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள். அந்த உன்னத பரிசுத்த பணியை ஒருக்காலும் நிறுத்திவிடாதே. உனது வாசிப்பு, ஜெபம், பேச்சு, பாடல், கொடுத்தல் அனைத்தும் அந்த மேன்மையான தேவப் பணியை மையமாக வைத்துச் செய்யப்படுவதாயிருப்பதாக. இந்த உன்னத ஊழியத்திற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் தேவன் உனக்குச் செய்வார். இவ்விதமான அன்பின் பணியைச் செய்யும் உன்னைத் தேவன் பத்தாயிரம் மடங்குகள் ஆசீர்வதித்துத் தமது ஜீவனுள்ள நாமத்தை மகிமைப்படுத்துவார்.

WILLIAM BOOTH.

சிநேகிதனே, உன் உலக வாழ்க்கையின் சம்பவங்கள் படம் போல் உன் மறுவாழ்க்கையிலே தோற்றமளிக்கும். அதுவே நரகத்தின் வேதனைகளை உனக்கு அதிகரிக்கச் செய்யும். நீ செய்துள்ள இரகசிய பாவங்கள், உன்னால் இடருக்குள்ளாக்கப்பட்ட ஏழை மக்கள், உன்னால் வஞ்சிக்கப்பட்ட உள்ளங்கள், நீ உன் பணத்தையும், சுகத்தையும், வாழ்க்கையையும் விரயமாக்கியது யாவும் உன் எண்ணத்தில் வந்துகொண்டேயிருக்கும். மேலும் உனக்குச் சுவிசேஷம் கூறப்பட்ட சந்தர்ப்பங்களும், நீ இரட்சிப்பைச் சுதந்தரித்துக் கொள்ள உனக்த அளிக்கப்பட்ட வாய்ப்புகளும் உன் கண்முன்னே தோற்றமளிக்கும். தேவ ஊழியர்கள் உன்னோடு எவ்வளவோ கெஞ்சிக்கேட்டும் நீ உன் இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டே வீட்டுக்குத் திரும்பிச் சென்றாயே, இவைகளெல்லாம் உன் எண்ணத்தில் தோன்றும். எத்தனை வேதனையான அனுபவம்!

O. J. SMITH.

Edited and Published by N. Samuel, Kotagiri-643217, Nilgiris.
Printed at the Thoothan Press, Newport Street, Nagercoil.